Registered as a News Paper in Sri Lanka    பக்கங்கள் 04

விலை ரூபா: 3-50

# ஈழநாதம்

THE EELANAATHAM    Peoples Daily    மக்கள் தினசரி

நாதம் 01 பிரமோதூத ஆவணி மீ 26 ஆம் உ செவ்வாய்க்கிழமை (11 - 09 - 1990) ஹிஜ்ரி 1410 ஸபர் 21 ஓசை 205

## மக்கள்; அகதிகளுக்கு உதவ ஆயர் வேண்டுகோள்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பில் இன்றுள்ள நிலமையினால்அ கதிகளாக முகாம்களில் தங்கியுள்ள தமிழ் மக்களுக்கு உதவுவதற்கு மட்டக்களப்பு மக்கள் முன்வரவேண்டுமென்று மட்டு - திருமலை ஆயர் கலாநிதி அதிவண கிங்ஸ்லி சுவாம்பிள்ளை வேண்டுகோள் விடுத்துள்ளார்.

மட்டக்களப்பு புனித மரியாள் இணைப்பேராலயத்தில் நடைபெற்றபிரார்த்தனை (4ஆம் பக்கம் பார்க்க)

# இலங்கைத் தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமையை அங்கீகரிக்க வேண்டும்

## இந்திய மத்திய அரசிடம் பண்ருட்டி கோரிக்கை

(சென்னை)

இலங்கைத் தமிழ் மக்களின் சுய நிர்ணய உரிமையை இந்தியா அங்கீகரிக்க வேண்டும் என்று முன்னாள் அமைச்சரும் அனைத்திந்திய அ. தி. மு. க. திரு நாவுக்கரசு பிரிவுத் தலைவருமான திரு. பண்ருட்டி இராமச்சந்திரன் வேண்டுகோள் விடுத்துள்ளதுடன்; சிறிலங்கா அரசினால் தமிழீழ விடுதலைப் புலிகள் அழிக்கப்படுவார்களேயானால் தமிழ் மக்கள் நிரந்தர அடிமைகளாகவோ, அகதிகளாகவோ தான் வாழ நேரிடும் என்றும் எச்சரிக்கை செய்துள்ளார்.

இலங்கைத் தமிழ் மக்களின் அபிலாஷைகளைப் பூர்த்தி செய்யும் வகையில் வட்டமேசை மாநாடு கூட்டப்பட்டு அவர்களின் கருத்துக்கள் பெறப்படுவதுடன் சமஷ்டி ஆட்சி அமைப்பு உருவாக்கப்பட வேண்டும் என்றும் அவர் கூறியுள்ளார்.

தினமணிக்கு நேற்று முன்தினம் அளித்த விஷேடபேட்டி ஒன்றில் இவ்வாறு தெரிவித்த திரு. இராமச்சந்திரன் சிறிலங்கா அரசு தனது முப்படைகளையும் இணைத்து தமிழ் மக்களைக் கொன்று குவித்து வருகின்றது. இந்நிலையில் இம்மக்கள் சார்பில் விடுதலைப்புலிகள் தம்மிடமுள்ள ஆயுதங்களைக்கொண்டு அந்த அழிப்பு நடவடிக்கையைத் தடுத்து நிறுத்தும் வகையில் போராடி வருகிறார்கள் என்றும் கூறினார்.

ஒப்பந்தங்கள் அனைத்தையும் மீறுவதே சிறிலங்கா அரசின் வழக்கம். சேனநாயக்கா-செல்வா, பண்டா - செல்வா ஆகிய ஒப்பந்தங்கள் இவ்வாறு மீறப்பட்டுள்ளதுடன்; இந் (4 ஆம் பக்கம் பார்க்க)

## ஒரு சிப்பாய் பலி

(மட்டக்களப்பு)

கிழக்கு மாகாணத்தில் மியாங்குளம் என்னும் இடத்தில் தமிழீழ விடுதலைப் புலிகளால் நடத்தப்பட்ட தாக்குதலொன்றில் ஒரு இராணுவ சிப்பாய் கொல்லப்பட்டதாக பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

## முறை சாராக் கல்வி மாணவர் இரத்த தானம்

(யாழ்ப்பாணம்)

யாழ் மருத்துவமனைக்கு முறைசாராக்கல்வி கற்கும் மாணவர்கள் ஒன்றிணைந்து இரத்ததானம் செய்ய முன்வந்தனர். இதில் முதல்கட்டமாக நேற்று மானிப்பாயில் இயங்கும் யாழ் போதனா மருத்துவமனையில் இரத்ததானம் செய்தனர்.

## இடம் பெயர்ந்த ஆசிரியர்கள் சந்திக்கவும்

(யாழ்ப்பாணம்)

வெளிமாவட்டங்களிலிருந்துஇடம் பெயர்ந்து வந்த (4 ஆம் பக்கம் பார்க்க)

## நல்லையில் நள்ளிரவு குண்டு வீச்சு

(யாழ்ப்பாணம்)

நல்லைக்கந்தன் ஆலய வளவுக்குள் உள்ள நாவலர் மண்டபத்துக்கு அருகில் நேற்று நள்ளிரவு 12.30 மணியளவில் அவ்ரோ விமானத்திலிருந்து போடப்பட்ட பாரிய குண்டு விழுந்து வெடித்தது.

கந்தன் ஆலயத்தில் பாதுகாப்புக்கருதி நூற்றுக்கணக்கான மக்கள் தங்கியிருந்தும் தெய்வாதீனமாக எவ்வித உயிரிழப்பும் ஏற்படவில்லை.

## அகதிமுகாமில் இருந்த 101 தமிழர்கள் படுகொலை

(வந்தாறுமூலை)

மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள வந்தாறுமூலை என்னுமிடத்தில் அமைந்துள்ள அகதிமுகாமில் தஞ்சமடைந்திருந்த அகதிகளில் 101 அப்பாவித் தமிழர்கள் சிறிலங்கா இராணுவத்தினால் படுகொலை செய்யப்பட்டுள்ளார்கள்.

மேலும் 141 பேரை சிறிலங்கா இராணுவத்தினர் கைது செய்து வைத்துள்ளதாகவும், இவர்கள் பற்றிய விபரம் எதுவும் தெரியவில்லை என்றும் (4 ஆம் பக்கம் பார்க்க)

## அகதிகள் பாதுகாப்பு மன்றம் அடையாள உண்ணாவிரதம்

(யாழ்ப்பாணம்)

நல்லூரில் அமைந்துள்ள அகதிகளுக்கான ஐக்கிய நாடுகள் சபை உயர் ஸ்தானிகர் காரியாலயத்துக்கு முன்னால் தமிழ் மாநில அகதிகள் பாதுகாப்பு மன்றத்தால் இன்று செவ்வாய்க்கிழமை காலை ஒருநாள் அடையாள உண்ணாவிரதமும், மறியல் போராட்டமும் நடாத்தப்படஉள்ளது.

வடக்கில் அகதிமுகாம் அமைத்தல் தொடர்பாக இந்திய, இலங்கை அரசுகளின் யோசனைக்கு ஐக்கிய நாடுகள் (4 ஆம் பக்கம் பார்க்க)

## 50 தமிழர்களை இராணுவம் டயர்போட்டுக்கொளுத்தியது

(மட்டக்களப்பு)

சிறிலங்கா இராணுவத்தினரால் ஐம்பது அப்பாவித் தமிழ் மக்கள் டயர் போடப்பட்டு உயிருடன் தீயிட்டுக் கொளுத்தப்பட்டுள்ளார்கள்.

மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள மூன்று கிராமங்களைச் சுற்றி வளைத்த இராணுவத்தினரால் கைது செய்யப்பட்டவர்களே இவ்வாறு உயிருடன் தீயிட்டுக் கொழுத்தப்பட்டதாக வெரித்தாஸ் அறிவித்தது.

இந்த படுகொலைச் சம்பவ (4 ஆம் பக்கம் பார்க்க)

## 'இராணுவம் முடிவில்லாத ஒரு நீண்ட யுத்தத்தில்சிக்கியுள்ளது'

- கேர்ணல் - சுனில் பீரீஸ்

(கொழும்பு)

இராணுவம் அதன் மூன்று பிரிவுகளுடன் முடிவில்லாதது போன்ற நீண்ட யுத்தத்தில் முழுமையாகச் சிக்கிக் கொண்டுள்ளது என கேர்ணல் சுனில் பீரிஸ் சண்டே ரைம்சிற்கு அளித்த பேட்டியொன்றில் தெரிவித்துள்ளார்.

உண்மையில் வடபகுதியில் இராணுவத்தினரின் பலமும் விடுதலைப்புலிகளுக்கு நிகராக உள்ளது. விடுதலைப்புலிகளின் போர்முனைகளும் உலகில் எமக்குத்தெரிந்த எந்தக் கெரில்லா அமைப்புகளும் கையாண்ட யுத்த நியமங்களையெல்லாம் விஞ்சியதாகவே காணப்படுகின்றன எனவும் தெரிவித்துள்ளார்.

விடுதலைப்புலிகள் தமது நோக்கத்தை அடையும்வகையில் கடந்த பத்து வருடங்களாக அயராது முயற்சியுடன் திடநோக்குடனும் போராடுவதும் போற்றுதற்குரியது எனவும் தெரிவித்துள்ளார்.

## விடுதலைப் புலிகள் வெறுமனே பிரிவினைவாத சக்திஅல்ல

(லண்டன்)

'தமிழீழவிடுதலைப்புலிகளை வெறுமனே பிரிவினை வாத சக்தியாக இந்தியா நோக்குமாகில் அது தப்பான ஒன்றாகும்' என்று தமிழீழ விடுதலைப் புலிகளின் முக்கிய பிரமுகர்களில் ஒருவரும் யாழ். மாவட்ட முன்னாள்தளபதியுமான திரு. கிட்டு (கிருஷ்ணகுமார்) தெரிவித்துள்ளார்.

இதே வேளை சிறிலங்கா அரசினால் தமிழ்மக்கள் பூண்டோடு அழிக்கப்பட்டு வரும் நிலையை இந்தியா தனது கவனத்தில் கொள்ள வேண்டும் என்றும் தெரிவித்துள்ளார்.

## ஆறு இராணுவத்தினர்காயம்

(ஏறாவூர்)

தமிழீழ விடுதலைப் புலிகளால் நடத்தப்பட்ட தாக்குதலொன்றில் ஆறு இராணுவத்தினர் பலத்த காயமடைந்தனர்.

ஏறாவூரில் நேற்றுமுன்தினம் நடத்தப்பட்ட இத் தாக்குதலில் காயமடைந்தவர்களில் இருவர் இராணுவ லெப்ரினட்கள் என்று பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

## கொச்சிக்கடை தேவாலய சர்ச்சை இன்னும்தீரவில்லை

(கொழும்பு)

பிரார்த்தனை செய்வதில் எழுந்த மொழிப்பிரச்சினை காரணமாக கொச்சிக்கடை அந்தோணியார் கோவில் பிரார்த்தனைகள் காலவரையறையின்றி நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது.

பலவருடகாலமாக மும்மொழிகளிலும் பிரார்த்தனைகள் இடம்பெற்று வந்த இத்தேவாலயத்தில் அண்மையில் தனிச் சிங்களத்தில் மட்டும் பிரார்த்தனைகள் நடைபெற வேண்டும் என ஒருபிரிவினர் வலியுறுத்தியதைத் தொடர்ந்து ஏனைய மொழிகளுக்கு ஆதரவு வழங்குவோருக்கும் ''சிங்களம் மாத்திரம்'' பகுதியினருக்கும் இடையில் இடம்பெற்ற தகராற்றினை தொடர்ந்து இத்தேவாலயம் கடந்த ஒன்றரை மாதமாக பூட்டப்பட்டுள்ளது.

## காமன்வெல்த் மாநாட்டில் சிறிலங்கா மனித உரிமைகள் மீறல் பிரச்சினை

(சென்னை)

முப்பத்தாறாவது காமன்வெல்த் பாராளுமன்ற மாநாட்டில் இலங்கையில் மனித உரிமைகள் மீறல் பற்றிய பிரச்சினை முக்கியமாக விவாதிக்கப்பட உள்ளதாக தமிழக சட்டப்பேரவை துணைத் தலைவர் திரு வி. பி. துரைசாமி தெரிவித்துள்ளார்.

சிம்பாவேயின் தலைநகரான ஹராரேயில் பதினான்காம் திகதி ஆரம்பமாகும் இம்மாநாடு தொடர்ந்து எட்டு நாட்கள் நடைபெறும். இம்மாநாட்டில் கலந்து கொள்ள உள்ள இந்திய (4 ஆம் பக்கம் பார்க்க)

## வரிவிளம்பரம்

### இடம் மாற்றம்

இராசா டீசல் என்ஜினியர்ஸ், 180, பருத்தித்துறை வீதியிலிருந்து தற்காலிகமாக 28/3 மணல்தறை லேன், கந்தர்மடம் யாழ்ப்பாணத்திற்கு இடம் மாற்றப்பட்டுள்ளது என்பதை வாடிக்கையாளர்களுக்கு அறியத்தருகின்றோம்.

(R/620)

### இடம் மாற்றம்

ரதிவோச் வேக்ஸ் அன் ஸ்ரோர்ஸ்இல.44கஸ்தூரியார் வீதியிலிருந்து, இல 12,பொன்னையா லேன், ஆறுகால்மடம் ஆனைக்கோட்டையில்(பிடாரி கோயில் உப. தபால் அலுவலகத்திற்கு அருகில்) இயங்கி வருகின்றது என்பதை எமது வாடிக்கையாளர்களுக்கு அறியத் தருகிறோம் (திருத்துதல் வேலையும் நடைபெறும்.

(B/1370)

### அநுபவமுள்ள தரமான சமையல்காரர் தேவை

நன்கு சமைக்கக்கூடிய சமையல் காரர் தேவை. தங்குமிட வசதியும் உணவு வசதியும் செய்து தரப்படும். குடும்பமாக சமையல் வேலை செய்ய விரும்புபவர்கள் உடன் இந்த விலாசத்துடன் தொடர்பு கொள்ளவும்:

கணேசன் கூல்பார், முத்திரைச்சந்தி, நல்லூர்.

### போட்டோஸ்ரற்

போட்டோஸ்ரற் பிரதிகளைப் பெற்றுக் கொள்ளவும் அடையாள அட்டைகளுக்கு கவர்இட்டுக் கொள்ளவும்:

கிளீன்கட், 37, சிவகுருநாதன் லேன், பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.

R/619

### தவறிவிட்டது

க. சிவஞானம் என்பவருடைய 031757 இலக்கமுடைய காசோலை 9-9-90 அன்று கோப்பாய்க்கும் கல்வியங்காட்டுக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் கீழுள்ள முகவரியில் ஒப்படைக்கவும்.

க. சிவஞானம்
கோப்பாய் வடக்கு,
கட்டுப்புலானை,
கோப்பாய்.

(R/623)

### முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

இணுவில் – சுதுமலை ஆகிய இடங்களில் 50 வருட காலமாக மகத்தான வைத்திய சேவை புரிந்த சித்த வைத்திய கலாநிதி செல்லப்பா கந்தையா அவர்களின் ஆத்மா சாந்தியடைய அவர் வந்தித்து வந்த ஸ்ரீ சிவநாச்சிஅம்பாளின் திருவடிகளை இறைஞ்சி இம் முதலாம் ஆண்டுஅஞ்சலியைச் செலுத்துகின்றோம்.

V.S.சுப்பிரமணியம்
செல்லப்பா(தமிழ்) வைத்தியசாலை, இணுவில்.

(R/622)

# அம்பாறை மாவட்டத்தில் படுகொலை நிகழ்ந்த கிராமங்களும் திகதியும்

அம்பாறை மாவட்டத்தில் 1-8-90இல் இருந்து 27-8-90 வரை படுகொலை செய்யப்பட்ட அப்பாவித் தமிழ் மக்களின் கிராம ரீதியானதும், திகதி ரீதியானதுமான விபரம் கீழே தரப்படுகிறது.

5-8-90இல் சாகமம் எனும் இடத்தில் இரு தமிழ் மக்கள் விசேட அதிரடிப்படையினரால் வெட்டிக் கொளுத்தப்பட்டனர்.

4-8-90இல் ஆலையடி வேம்பைச் சேர்ந்த தமிழ் மக்கள் மூவர் அக்கரைப்பற்றில் சிங்கள காவல் துறையினராலும் முஸ்லிம் கும்பலாலும் வெட்டிக் கொல்லப்பட்டனர்.

6-8-90இல் சங்கமான் கண்டி என்னும் இடத்தில் 19 தமிழ் மக்கள் விசேட அதிரடிப்படையால் சுட்டுக் கொல்லப்பட்டனர். இவர்களைக் கொலை செய்தபின் விடுதலைப்புலிகள் கொலை செய்ததாக அரசு அறிவித்தது.

07-08-1990இல்இராக்கேணி என்னும் கிராமத்தில் 47 தமிழ் மக்கள் முஸ்லிம் கும்பலால் வெட்டிக் கொலை செய்யப்பட்டனர்.

08-08-1990இல் அலிகம்பையில் 10 தமிழ் மக்கள் விசேட அதிரடிப்படையால் கொல்லப்பட்டனர். 5 பெண்கள் பாலியல் வன்முறைக்குள்ளாக்கப்பட்டனர்.

11-08-1990இல் சம்மாந்துறை அகதி முகாமில் இருந்து 37 தமிழ் மக்கள் முஸ்லிம் கும்பலால் வெட்டிக் கொல்லப்பட்டனர்.

12-08-199 0இல் அக்கரைப்பற்றைச் சேர்ந்த இரு தமிழ் மக்கள் விசேட அதிரடிப்படையால் அம்பாறை வீதி 3 ஆம் கட்டையில் சுட்டு எரிக்கப்பட்டனர்.

13-08-1990 இல் வீரமுனை அகதி முகாமில் இருந்த 30 அப்பாவித் தமிழ் மக்கள் முஸ்லிம் கும்பலால் வெட்டிக் கொல்லப்பட்டனர்.

14-08-1990இல் அக்கரைப்பற்றில் விசேட அதிரடிப் படையால் கைதுசெய்யப்பட்ட 46 தமிழர்களின் நிலை என்ன என்பது யாருக்கும் தெரியாது.

15-08-1990இல் கோமாரியில் 8 தமிழர்கள் விசேட அதிரடிப்படையால் சுட்டுக் கொல்லப்பட்டனர்.

16-08-1990இல் அக்கரைப்பற்றில் தமிழர் ஒருவர் முஸ்லிம் கும்பலால் கொலை செய்யப்பட்டார்.

17-08-1990இல் திருக்கோயிலில் விசேட அதிரடிப் படையால் 2 தமிழ் மக்கள் கொல்லப்பட்டனர்.

18-08-1990இல் கண்ணகி கிராமத்தில் 3 தமிழ் மக்கள் விசேட அதிரடிப்படையால் கொல்லப்பட்டனர்.

19-08-1990 இல் 13 ஆம் கிராமத்தில் விமானக் குண்டு வீச்சால் 13 தமிழ் மக்கள் கொல்லப்பட்டனர்.

20-08-1990இல் பனங்காட்டில் தமிழர் ஒருவர் விசேட அதிரடிப்படையால் சுட்டுக் கொலை செய்யப்பட்டார்.

22-08-1990இல் கோணாவிலில் கைது செய்யப்பட்ட 40 தமிழ் மக்கள் குறித்த விபரம் இல்லை.

23-08-1990இல் தம்பிலுவில் திருக்கோயிலில் அகதிகளாக இருந்த 9தமிழ் மக்கள் விசேட அதிரடிப்படையால் சுட்டுக் கொல்லப்பட்டனர்.

24-08-1990இல் திருக்கோயிலில் 8 தமிழ் மக்கள் விசேட அதிரடிப்படையால் சுட்டுக் கொல்லப்பட்டனர்.

### வளைகுடாப் பிரச்சினை

## அமைதியாகவே தீர்க்கப்படும் அமெரிக்க - சோவியத் நம்பிக்கை

(கெல்சிங்கி)

வளைகுடாப் பிரச்சினையானது அமைதி வழியிலேயே தீர்க்கப்பட்டு விடும் என்ற நம்பிக்கை தங்களிடம் உள்ளதாக அமெரிக்காவும் சோவியத் யூனியனும் தெரிவித்துள்ளன.

நேற்று முன்தினம் கெல்சிங்கியில் ஏழுமணி நேரம் நடைபெற்ற உச்சிமாநாட்டின் முடிவில் அமெரிக்க ஜனாதிபதி ஜோர்ஜ் புஷ்ஷும், சோவியத் ஜனாதிபதி கொர்பசேவும் கூட்டாக விட்ட அறிக்கையில் இதனைத் தெரிவித்துள்ளனர்.

அதே வேளை இப்பிரச்சினை குறித்து ஐ. நா. சபை கொண்டுவந்த தீர்மானங்கள் முழுமையாக நிறைவேற்றப்படவேண்டும் எனவும் இந்த இரு நாடுகளும் கேட்டுக் கொண்டிருக்கின்றன.

ஈராக் நடவடிக்கைகளைக் கண்டிக்க இரு நாடுகளின் ஜனாதிபதிகளும் அமைதி வழி மிகவும் முக்கியமானது எனத் தெரிவித்தனர்.

இதன் பின்னர் தனித்தனியே கருத்துத் தெரிவித்தனர். அமெரிக்க ஜனாதிபதி வளைகுடாப் பிராந்தியத்தில் காணும் பாதுகாப்பு நடவடிக்கைகள் தமக்கு மனநிறைவு ஏற்படும் வரை அமெரிக்க துருப்புக்கள் தொடர்ந்து தங்கியிருக்கும் எனத் தெரிவித்தார்.

சோவியத் ஜனாதிபதி கொர்பசேவ் சர்வதேச சமூகத்தின் கோரிக்கைக்கு அனுகூலமான விதத்தில் முடிவு எடுக்கவேண்டும் என ஈராக்கிய ஜனாதிபதி சதாம் உசைனை கேட்டுக்கொண்டார்.

## அரசாங்க அறிவித்தல்

### மார்பு நோய் சிகிச்சை நிலையம் யாழ்ப்பாணம்.

மேற்படி சிகிச்சை நிலையம் கோப்பாயில் தொடர்ந்து இயங்கிக்கொண்டு இருக்கின்றபடியால், இந்நிலையத்தில் கடமையாற்றும் சகல ஊழியர்களையும் உடனடியாக வேலைக்குச் சமுகமளிக்கும்படி கேட்டுக் கொள்ளப்படுகின்றது.

ந. கனகசபை
யாழ். பிராந்திய சுகாதார சேவை

(B/1382)

## 1ஆம் ஆண்டு நினைவஞ்சலி

### திருமதி பிலிப்புபிள்ளை

பிறப்பு 26-02-1911 இறம்பு 11-09-1989

உனை நினைக்கும் கணம் எமதுள்ளம்
துடிக்குதம்மா!
உன் ஆன்ம சாந்திக்கு யேசுவை
பூஜிக்கின்றோம்.

இவரின் பிரிவால் துயருறும்
மகன், மகள், சகோதரி, பெறாமக்கள்,
மருமக்கள், பேரப் பிள்ளைகள்

இன்று வவுனியா, றம்பைக்குளம் அந்தோனியார் கோவிலில் இவரின் ஆன்ம இளைப்பாற்றுக்காக பூஜை ஒப்புக் கொடுக்கப்படும்.

தகவல்: ஜே. எல். சௌந்தரநாயகம்
மருக்காரம்பளை, வவுனியா.

(B. 1371)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி



கோண்டாவில் வடக்கு, கலைவாணி வீதியைச் சேர்ந்த

### திரு. முருகேசு சுப்பிரமணியம்

மலர்வு 20-10-1917 உதிர்வு 12-08-1990

பேரன்பின் தெய்வமே! எம்மை ஆறாத் துயரில் ஆழ்த்தி மீளாத்துயில் கொண்டதேன்? எம் உயிருக்கும் மேலான தந்தையே! படுக்கையில் வைத்துப் பார்க்கப்படாதென்றோ நொடிப் பொழுதில் தங்கள் உயிர்கவர்ந்தான் கொடிய காலன்?

அன்னாரின் இறுதிச் சடங்கிலும், வீட்டுக் கிரியைகளிலும் கலந்து கொண்டு எங்கள் துயரில் பங்கேற்று ஆறுதல், அனுதாபங்களைத் தெரிவித்த சகலருக்கும் எங்கள் குடும்பத்தாரின் சார்பில் நன்றியறிதலைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

உங்கள் ஆன்ம சாந்திக்காக பிரார்த்திக்கும்
மனைவி, மக்கள், மருமக்கள் பேரப்பிள்ளைகள்,

கோண்டாவில் வடக்கு,
கோண்டாவில்.

(R/621)

## சிந்தனைக்கு

கடமையைச் சரிவர ஆற்றும் போது, அதில், அச்சத்துக்கு இடம் இல்லை.

— வில்லியம் ஷேக்ஸ்பியர்

ஈழநாதம்

31, வைமன் வீதி, யாழ்ப்பாணம். 11-09-90
தொலைபேசி
ஆசிரியபீடம்: 025-2839 நிர்வாகபீடம்: 2208
த. பெ. எண் 05

# காலகட்டக் கடமை

தமிழரின் தனிநாட்டுக் கோரிக்கையை முறியடிக்க கடந்த காலத்திலும் சரி, தற்போதும் சரி சிங்கள அரசியல்வாதிகளும் உயர்மட்ட அதிகாரிகளும் புத்தி ஜீவிகளும் தொடர்ந்து செயற்பட்டுக் கொண்டிருக் கின்றார்கள்.

இவர்களில் சிலர் தமது துறைக்கும் அதிகாரத்திற்கும் அப்பாலும் சென்று முறியடிப்பதற்கான முயற்சியில் ஈடுபட்டுள்ளனர். அல்லது முறியடிப்பதற்கான வழிமுறை களைத் தெரிவித்துள்ளனர்.

அரசியல்வாதிகளாலும், அரச அதிகாரிகளினாலும் நீண்டகாலமாகவே தமிழர் தாயகத்தை கபளீகரம் செய்யும் திட்டமே போராட்டத்தை மழுங்கடிக்கும் வழிமுறையாக இருந்தது. தமிழர் பிரதேசங்களில் குடியேற்றங்களை நிறுவுவதன் மூலம் இன விகிதா சாரத்தை மாற்றியமைப்பதும், தமிழ் பிரதேசங்களைத் துண்டாடுவதும் போராட்டத்தை அழித்துவிடும் என அவர்கள் திட்டமிட்டனர்.

இந்நோக்கத்தின் அடிப்படையில் குடியேற்றங்கள் அரசியல்வாதிகளால் ஒருபுறம் நடத்தப்பட்டபோதும், அரசியல்வாதிகளுக்கோ அமைச்சர்களுக்கோ தெரியாமல் உயர் அதிகாரிகள் சிலரும் திட்டமிட்டுக் குடியேற்றங்களை விஸ்தரித்துள்ளனர்,

மகாவலி அமைச்சில் இருந்த உயர் அதிகாரிகள் குழு ஒன்று 1983 ஆம் ஆண்டுக்கு முன்னதாகவே மதுறுஓயாத் திட்டத்தில் 45,000 சிங்களவர்களைக் குடியேற்றியது. இக் குடியேற்றம் தொடர்பாக எழுந்த எதிர்ப்புக்களினால், அமைச்சினால் குடியேற்றம் நிறுத்தப்பட்டபோதும், அதை சிலஅதிகாரிகள்தொடர்ந்தும் நடைமுறைப்படுத்தினர்இதுதொடர்பாக பின்னர் கைதுசெய் யப்பட்ட அதிகாரி மலிங்க ஹேர்மன் குணரத்ன ''எதிர்கால நன்மை கருதி செயற்பட்ட திட்டத்திற்காக ஒருபோதும் மன்னிப்புக்கோரப் போவதில்லை'' எனத் தெரிவித் துள்ளார்.

இக் கூற்று இரண்டாம் உலக மகா யுத்தத்தில் அணுக் குண்டை யப்பான் மீது வீசிய விமானி தேவை ஏற்படின் என் தேசத்திற்காக (அமெரிக்காவுக்காக) இன்னும் ஒரு தடவை அணுக்குண்டை வீச நான் தயாராக உள்ளேன் என்பதை ஞாபகப்படுத்துவதாக உள்ளது.

தமிழர் போராட்டங்களை குடியேற்றங்கள் மூலம் அழித்தொழிக்க அரசியல்வாதிகள், அதிகாரிகள் முயற்சிக்கும் அதேவேளையில் இராணுவ அதிகாரி களிடமும் ஒன்றுக்கு மேற்பட்ட கருத்துக்கள் நிலவுகின்றன. சில இராணுவ அதிகாரிகள் இராணுவ ரீதியாக தமிழரை அடக்கி ஒடுக்கலாம் எனக் கருதுகின்ற போதும் பலர் மாற்று வழிமுறைகளையே சிந்திக்கின்றனர்.

பிரிட்டிஷ் இராணுவக் கல்லூரியில் பட்டம் பெற்றவரும், பாகிஸ்தானில் விசேட பயிற்சியும், பிரிட்டிஷ் எஸ். ஏ. எஸ் சில் பயிற்றுவிக்கப்பட்டவரும், லிபரேசன் ஒப்பரேசனில் பங்குபற்றியவருமான கேணல் சுனில் பீரிஸ் புலிகளை இராணுவ ரீதியாக வெற்றி கொள்ள முடியாது என்றும், வடக்கு - கிழக்குமீது பொருளாதாரத் தடையைக் கொண்டு வருவதன் மூலமே வெற்றி பெறலாம் என ஆலோசனை தெரிவித்துள்ளார்.

இவற்றோடு பல்கலைக் கழக மட்ட புத்திஜீவிகளான கே. எம். டீ. சில்வா போன்ற வரலாற்றுத்துறைப் பேராசிரியர்களும், ஏனைய துறையினரும் இலங்கையில் தமிழருக்குத் தாயக பூமியே இல்லை என பொய்யான சான்றுகள் மூலம் நிருபிக்க முற்படுகின்றனர்.

அதேவேளை இன்றைய சிறிலங்கா அரசாங்கமோ அரசியல் ரீதியாக தமிழரைத் தனிமைப் படுத்தி, இராணுவ ரீதியாகப் பலவீனப்படுத்தும் இராஜதந்திர நடவடிக்கை யில் இறங்கியுள்ளது. இதனை அமைச்சர் ரணில் விக்கிரம சிங்கா வெளிப்படையாகவே தெரிவித்துள்ளார்.

இவ்வாறாக தமிழரின் போராட்டத்தை அழித் தொழிக்க பௌத்த பேரினவாத சக்திகள் ஒன்று திரண்டு நிற்கும் இவ்வேளையில் சுதந்திர போராட்டத்தை நடத்திக் கொண்டிருக்கும் தமிழர் மத்தியில் உள்ள புத்திஜீவிகள் மத்தியில் இருந்து தமிழர் போராட்டம் சம்பந்தமாக கருத்துக்கள் எதுவும் பெரிய அளவில் வெளிவருவதாக இல்லை இது வேதனையளிப்பதாக உள்ளது.

கடந்த காலத்தில் சிறிலங்கா அதிகாரிகளின் குடியேற்றத் திட்ட நடைமுறைகளுக்கு சில தமிழ் அதிகாரி கள் ஓரளவு தடையாக இருந்தது போன்றாவது தற் பொழுது புத்திஜீவிகள் போராட்டத்திற்கு தமது பங் களிப்பைச்செய்யலாமே. இப்போராட்டத்திற்குப் பங்களிப்புச் செய்யாத புத்திஜீவிகள் தமது சமூகக் கடமையில் இருந்து தவறியவர்களாகவே இருப்பார்கள்.

# போராட்டத்தையும் தமிழரையும் அழிப்பதற்கானஇரகசிய குடியேற்றத் திட்டம்

சில விதி விலக்குகள் இருந்தாலும் பொதுவாக உலகில் உள்ள சகல யுத்தங்களும் நிலப்பரப்புக்காகவும், நீர்ப் பரப்புக்காகவுமே நிகழ்கின் றன.

இன்று ஈராக்கிய ஆட்சி

களும் விரட்டப்பட்டுக் கொண் டிருக்கிறார்கள்,

பிரதேசமும் அங்கிருந்து வெளியேற்றப்பட்ட மக்கள் தொகையும் பின்வருமாறு,

யாழ்ப்பாணம்-16,000 பேர் கிளிநொச்சி - 5000 பேர், வவு

பிரதேசங்களைத் தவிர்ந்த இலங்கையின் பிரதேசம் 46, 344 சதுர கிலோ மீட்டர் பரப்பளவு கொண்டதாகும். ஒரு சதுர கிலோ மீட்டருக்கு 276 பேர் அங்கு வாழ்கிறார் கள்.

அத்துடன் பெருந்தோட் டத் தொழிலும் ஏனைய கைத்தொழில்களும், பொது இடங்களும் மக்கள் வாழும் இடங்களை தென் பிரதேசங் களில் ஆக்கிரமித்துள்ளன.

தமிழீழ விடுதலைப் புலிகள் சண்டையிடுவது இலங்கையின் 40 சதவீத நிலத்தை 12 வீத மக்களுக்கு பெற்றுக் கொடுப் பதற்காகவே இந்த 12 வீத மக்களில் மூன்றில் ஒரு பகுதி தமிழ் மக்கள் வாழ்வது தெற் குப் பகுதிகளிலே ஆகும்.

அத்துடன் நாட்டில் 60 வீத கடலோர பிரதேசங்கள் வட க்குக் கிழக்கிலேயே அடங்கு

> ''சண்டே ரைம்ஸில்'' வெளிவந்த இக் கட்டுரை யானது இத்திட்டத்தின் பிரதம சூத்திரதாரியான எம். எச். குணரட்னவின் நேரடித் தகவலாகும்.

யாளர் சதாம் உசைன் குவைத் துக்குள் படையெடுத்தது குவைத்தின் கட்டிடங்களை நிர்மூலமாக்குவதற்கோ அல் லது அதன் தலைவனை சிறைப் பிடிப்பதற்காகவோ அல்ல. அதில் ஒன்று மட்டும் தெளி வாகத் தெரிகிறது. அந்தக் குவைத்தின் மண்ணைக் கைப் பற்றுவதற்காகவும், எண் ணெய் வளத்தை தனதாக்கிக் கொள்வதற்காகவுமே.

இன்று விடுதலைப் புலிகளு டனான ஸ்ரீலங்கா அரசின் யுத்தத்தின் தார்ப்பரியமும் மேற்கூறப்பட்ட வகையினதே.

### குடியேற்றமே ஒரேவழி

தமிழீழ விடுதலைப் புலிகள் இன்று சண்டையிடுவதன் உண்மை நோக்கமென்ன?

புத்தளம், மன்னார், வவு னியா, முல்லைத்தீவு, மட்டக் களப்பு, யாழ்ப்பாணம், அம் பாறை, திருக்கோணமலை ஆகிய மாவட்டங்களை தனி யான தங்கள் கட்டுப்பாட்டுக் குள் உட்பட்ட பிரதேசமாக்கு வதற்கும் இப்பிரதேசங்களில் அரசகட்டுப்பாடுகளைப்பூரண மாக ஒதுக்கி விடுவதற்குமே யாகும்.

மேற்படி பிரதேசங்களின் கூட்டுத் தொகுப்பே ஈழம் என்ற சொல்லுக்குள் அடங்கு கிறது.

எந்த நியாயமான அரசும் மேற்படி ஈழத்தை அனுமதிக் குமா?அப்படியானால் இதற்கு எந்த வகையான அரசியல் தீர்வு காண்பது?

அப்படியான ஒரு அரசியல் தீர்வை ஏற்றுக்கொள்ள விடு தலைப் புலிகள் முன்வருவார் களா? இல்லை.

அப்படியானால் அவர்கள் எப்படி ஈழத்தைப் பெறப் போகிறார்கள்?

அங்குள்ள சிங்களவர்களை




குடியேற்றுவதற்கான இத்திட்டத்தை 1983 யூலையின் பின்பு அரசு மீண்டும் நடைமுறைப் படுத்திய போதிலும் இக் குடியேற்றத் திட்டங்க ளுக்கு எதிராக விடுத லைப் புலிகள் மேற் கொண்ட நடவடிக்கைக ளினால் திட்டம்தோல்வி யில் முடிந்தது.

> தமிழ் நிர்வாக அதிகாரிகள் மீது எம். எச். குண ரட்ன கொண்டிருந்த சீற்றத்தைப் பார்க்கும்போது இதனைத் தடுக்க அவர்கள் எத்தனை அரும்பாடுபட் டுள்ளனர் என்பது புரியக் கூடியதாய் உள்ளது.

ணியா - 10,000 பேர், திருக் கோணமலை - 15,000 பேர், மட்டக்களப்பு - 30,000 பேர், மன்னார் - 7,000 பேர், முல் லைத்தீவு - 4,000 பேர்.

கின்றன.

இப்படியான ஒரு சூழ்நிலை யை மாற்றி அமைப்பதற்காக வேண்டி 1983-84இல் சில திட் டங்கள் போட்டோம். நாங்

> இந்த மண் சிங்கள மக்களுக்கென தத்தம் பண்ணப் பெற்ற மண் (The Promissed Land) என்றும் இதனைக் கபளீகரம் செய்யும் ''பிரிவினைவாதிகளின்'' நட வடிக்கைகளை தடுப்பதற்குரிய ஒரேயொருவழி சிங்களக் குடியேற்றங்களை தமிழ்ப் பகுதிகளில் செய்ய வேண்டும் என்னும் ஓர் இரகசிய வேலைத் திட்டம் 1983 ஆம் ஆண்டுக்கு முன் உருவாக்கப்பட்டது.
>
> இத்திட்டத்தை உருவாக்கியவர்கள் சர்வதேச ரீதியாக பெரும் பதவிகளில் அமர்ந் திருப்போரும் உள் நாட்டில் பேராசிரியர் பதவிகளில் இருப்போரும் மற்றும் புத்தி ஜீவிகளும் நிர்வாக உயர் அதிகாரிகளும் ஆவர்.
>
> தமிழ் மாவட்டங்களை ஒன்றில் இருந்து ஒன்றை துண்டாடுவதற்கும் கிழக்கு மாகாணத்துடனான வடபகுதியின் சகல தொடர்புகளையும் துண்டிப்பதற்கேற்ற வகையில் நீண்ட கால அடிப்படையிலான ஓர் இரகசிய குடியேற்றத் திட்டத்தை தயாரித்து அதனை சூசகமாக நடை முறைப்படுத்துவதற்குரிய அடுத்த கட்ட ஒழுங்கு களைச் செய்யுமாறு இத்திட்டம் இரகசியமாக மகாவலி அமைச்சிடம் சமர்ப்பிக்கப்பட் டிருந்த போது இந்த அமைச்சுகளில்இருந்த சில தமிழ் நிர்வாக உயர் அதிகாரிகள் இதனை தடுப்பதற்குரிய நடவடிக்கைகளை மேற் கொண்டிருந்தனர். அதனை மீறியும் குடியேற்றம் ஆரம்பமாகியது. மேலும் பெரும் அரசியல் பிரசாரங்களும் இதற்கு எதிராக வந்த போது இத்திட்டம் தற்காலிகமாக அப்போது தடுத்து நிறுத்தப் பட்டது.
>
> இந்நிலையிலும் இத் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டுக் கொண்டிருந்த வேளையில் இத்திட்டத்தின் முக்கிய சூத்திரதாரியான மலிங்க ஹேர்மன் குணரட்ன முயன்ற போது அவரும் அவரது ஏனைய 40 பேரும் தடுப்புக் காவலில் வைக்கப் பட்டனர்.
>
> ஆனால் பின்பு இத் திட்டத்தைநடைமுறைப்படுத்துவதில் அப்போதைய மகாவலித் துறை அமைச்சர் காமினி திஸநாயக்கா உரியவாறு செயற்படவில்லை என்று ஜனாதிபதி ஜே. ஆர் ஜெயவர்த்தனாவால் கண்டிக்கப்பட்டதுடன் அவரது மகன் ரவி ஜெயவர்த்தனா இத்திட்டம் செயல்படவேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தி இத்திட்டத்தை அமுல்படுத்துவதற்குரிய நடவடிக்கைகளில் மீண்டும் ஈடுபட்டார்.
>
> ஆனால் 1983 ஆம் ஆண்டு யூலையில்நடைபெற்ற இனக்கலவரம் இத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கு பாதகமான நிலைமையை ஏற்படுத்தியது.

யும், முஸ்லிம்களையும் அடித்து விரட்டியா?

மறைமுகமாக அங்கிருந்த சிங்களவர்களும், முஸ்லிம்

அண்மையில் இடம் பெயர் ந்தவர்களின் எண்ணிக்கை இதில் அடங்கவில்லை.

வடக்குக் கிழக்கு தமிழ்ப்

கள் செய்த காரியங்கள் பிழை யானதென்று இன்னும் நாங் கள் நம்பவில்லை.

(தொடரும்)



02-09-90 அன்று
வீரமரணமடைந்த
**பெனாவின்**
குறிப்பேட்டிலிருந்து
சிலவரிகள்

**4**

7 ' 8 ' 1990
தமிழீழம்

எமது போராட்ட கால
கட்டங்களை மூன்று கால
கூறாக அமைந்த பாதைகள்.
இரு பாதைகளில் வெற்றியை
கண்டு விட்டோம் இப்பொழுது
மூன்றாவது பாதையில் வெற்றி
யோடு சென்று விடிவின்
பக்கம் நெருங்கி விட்டோம்

இலங்கை
இந்தியா
இலங்கை

போராளி

# மூன்றாவது நாளாகவும் நள்ளிரவில் குடிமனைகள் மீது குண்டுவீச்சு

(யாழ்ப்பாணம்)

மூன்றாவதுநாளாக நேற்று நடுநிசியில் யாழ். நகர் மீது சிறிலங்கா குண்டு வீச்சு விமானங்கள் தாக்கியுள்ளன. இந்தத் தாக்குதல்காரணமாக பல பொதுமக்களின் வாழ்விடங்கள் நாசமாக்கப் பட்டுள்ளன.

நடுநிசியில் வந்த அவ்ரோ விமானம் நேற்று முன்தினம் கோயில் வீதியில் பாரிய குண்டுகளை வீசியது. இக்குண்டுகளில் ஒன்று பிராமணக்கட்டு ஒழுங்கையில் வீழ்ந்து வெடித்ததில் அவ்விடத்தில் இருந்த பொதுமக்களின் வாழ்விடங்கள் பல சேதமுற்றுள்ளன. மேலும் ஒரு குண்டு கோயில் வீதியில் உள்ள ஒரு வீட்டில் வீழ்த்தப்பட்டபோதிலும் வெடிக்காத நிலையில் காணப்பட்டது. இது வளையம் இடப்பட்ட தகர டப்பா போல் காணப்படுவது குறிப்பிடத்தக்கதாகும்.

மூன்றாவது குண்டு அதே கோயில் வீதியில் உள்ள பொறியியல் நிலையம் ஒன்றின் மீது வீழ்ந்ததில் அந்த கைத்தொழில் நிலையமும், சுற்றி இருந்த பொதுமக்களின் வாழ்வடங்களும் நாசமாயின.

இந்த குண்டுத்தாக்குதல் நடந்து முடிந்ததும் அவ்ரோ விமானம் பலமுறை வட்டமிட்டு சென்று மறைந்தது.

பின் மூன்று மணியளவிலும் யாழ். நகரை நோக்கி கண்மூடித்தனமாக தாக்கி நகரை அதிரவைத்தது.

நேற்றுப்பகல் முழுவதும் சிறிலங்கா விமானப்படை ஹெலிக்கொப்ரர் நகரின் மேலாக வெறிநாய்போல் அலைந்து திரிந்து மக்கள் நடமாட்டம் காணப்பட்ட பகுதிகளில் பரவலாக வேட்டுகளை தீர்த்தது.

மாலையில் மாச்செற்றி குண்டுவீச்சு விமானங்கள் இரண்டு நகரை வட்டமிட்டு குண்டுகளை வீசின. அதேசமயம் அவ்வழியே பாரிய விமானம் வந்து மக்களைக் கிலிகொள்ளச்செய்தது. எல்லோரும் பீதியுடன் குண்டு தள்ளப்படுகிறதா என அவ் விமானத்தை பார்த்தவண்ணம் நின்றனர். ஆனால் அது நேரே சென்று மறைந்தது. சிறிது நேரத்தில் மாச்செற்றி விமானங்களும் சென்று மறைந்தன.

## ஈராக்கிய எல்லைக் கிராமத்தில் இலங்கை அகதிகள் அவலம்

(யாழ்ப்பாணம்)

கணிசமான இலங்கையர் ஜோர்டானின் எல்லைக்கு அண்மையிலுள்ள ஈராக்கிய எல்லைக் கிராமமான ''குப்பாஸ்'' சில் தஞ்சமடைந்துள்ளதாகவும் அவர்கள் உணவிற்கும் தண்ணீருக்கும்பெரும் கஷ்டப்படுவதாகவும் அங்கிருந்து யாழ்ப்பாணம் வந்து சேர்ந்த காரைநகர் வாசி ஒருவர் தெரிவித்தார்.

ஈராக் எல்லைக் கிராமத்தினுள் தஞ்சமடைந்தவர்கள் கட்டம் கட்டமாக ஜோர்டானுக்குள் அனுமதிக்கப்படுவதாகவும், அனுமதிக்கப் பட்டவர்கள் இலங்கைக்கு அனுப்பப்பட்ட பின்னரே மற்றவர்கள் அனுமதிக்கப்படுவதாகவும் அவர் தெரிவித்தார்.

வரண்டபாலைவனப் பிரதேசமாக குப்பாஸ் பகுதி இருப்பதினால் அம்மை, வயிற்றோட்டம் போன்ற நோய்களினால் குழந்தைகள் பெரிதும் பாதிக்கப்பட்டு இன்னலுறுவதாகவும் அவர் தெரிவித்தார்.

ஜோர்டான் பதினைந்து நாட்களுக்கு மட்டுமே விசா வழங்குவதாகவும் அதற்குள் இலங்கை தூதரகம் போக்குவரத்து ஒழுங்குகளைச் செய்து முடித்துவிட வேண்டும் என்றும் தெரிவித்தார். அவ்வாறு முடிக்கும் பட்சத்திலேயே அடுத்த தொகுதி மக்கள் ஜோர்டானுக்குள் விடப்படுகின்றனர் எனவும் தெரிவித்தார்.

இங்கு தங்கியுள்ள அகதிகளுக்கு மிகக்குறைந்தளவு உணவுப் பொருட்களே வழங்கப்படுகின்றது எனவும் ஒரு நாளைக்கு ஒரு ரொட்டியும், தக்காளிப்பழமும் வழங்கப்படுவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

## ஒய்வூதியம் வழங்கச் செயலகத்தில் பணமில்லை

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்தில் உள்ள ஒய்வூதியதாரருக்கு ஒய்வூதியத்தைப் பணமாக வழங்குவதில் பலசிக்கல்கள் உள்ளது. ஜூலை மாதத்திற்கும், ஆகஸ்ட் மாதத்திற்குமாக 720 இலட்சம்ருபா பணம் கொழும்பிலிருந்து வரவேண்டும். இந்த தொகைப் பணத்தைப் பெற்றுக் கொள்வதில் பல நடைமுறைச் சிக்கல்கள் உள்ளது. அப்படி அவற்றைப் பெற்றுக் கொள்வதாயினும் சிறிது சிறிதாகவே பெற்றுக்கொள்ள முடியும் என யாழ். செயலக மேலதிக அரசாங்க அதிபர் நேற்றுத் தெரிவித்தார்.

மேலும் அவர் இவ்விடயம் பற்றி தெரிவிக்கையல் தற்போது நாட்டில் புழக்கத்தில் இருக்க வேண்டிய பணம் ஒரு சில முதலாளிகளிடம் போய்ச் சேர்ந்துவிட்டது. அவர்கள் வங்கிகளில் வைப்புச்செய்யாத நிலையில் வங்கிகளில் ஒய்வூதியதாரருக்கோ அல்லது வேறு எந்தக் காசோலைகளாய் சம்பளம் பெறுபவர்களுக்கோ பணமாக மாற்றிக் கொடுக்க முடியாத நிலையில் உள்ளது என அவர் கூறினார்.

இவ்விடயம் சம்பந்தமாக ஒய்வூதியப்பகுதி பிரதம கணக்காளர் கருத்துத் தெரிவிக்கையில் வடபகுதி ஒய்வூதியதாரர் தற்போது நிலவும் கஷ்ட நிலை காரணமாகப் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர். இவர்களுக்கு நாம் செய்யக் கூடிய ஒரே உதவி அவர்களது ஒய்வூதியத்தைப் பணமாகவழங்குவதே ஆகும் என ஏற்கனவே நான் யாழ். அரசாங்க அதிபரிடம் கூறிவிட்டேன். தற்போது அவர் கொழும்பு சென்று சில அதிகாரிகளுடன் கலந்தாலோசிக்கும் போது இவ்விடயம் குறித்தும் சிலமுடிவுகளைஎடுக்கவுள்ளார். இந்த முடிவைப் பற்றி விரைவில் எமக்கு அறிவிப்பார் என கூறினார்.

மேலும் எதிர் காலத்தில் ஒய்வூதியதாரருக்கு வழங்க வேண்டிய வவுச்சர்கள் நிலைமை சீரடையும்வரை கப்பலிலேயே கொண்டு வருவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன என அவர் கூறியதுடன் ஆகஸ்ட் மாத வவுச்சர்கள் இப்பொழுது அனுப்புவதற்கான வேலைகள் ஆரம்பமாகியுள்ளன. அத்துடன் இந்த ஒய்வூதிய தாரருக்குக் கொடுக்கவேண்டியகாசோலைகள் எழுதும் வேலைகளும் ஆரம்பமாகிவிட்டதாகவும் பிரதம கணக்காளர் தெரிவித்துள்ளார்.

## நிவாரணக்கோடுப்பனவு வழங்க அரச அதிபரிடம் கோரிக்கை

அண்மையில் ஆரம்பித்த சிறிலங்கா இராணுவத்தின் இராணுவ நடவடிக்கைகள் காரணமாக தமிழ்ப் பகுதிகளில் ஏற்பட்டுள்ள அத்தியாவசிய உணவுப் பொருட்களின் விலையேற்றத்தைக் கருத்தில் கொண்டு யாழ். கச்சேரி ஊழியர்கள் கஷ்ட நிவாரண பணிக்கொடை வழங்கும்படி யாழ். அரசாங்க அதிபரிடம் வேண்டி உள்ளனர்.

மேலும் தற்போதய நிலையை சமாளிக்கும் நோக்குடன் மூன்று மாத சம்பளமுற்பணமும் வழங்கும் படி அவர்கள்வேண்டிக்கொண்டுள்ளனர்

### சம்பளத்தைப்பெறவும்

தேசியஉப்புக்கூட்டுத்தாபன சம்பள முற்பணம் பெறாதோர்கள் மிருசுவில் உற்பத்தி முகாமையாளர் சிறிராமநாதன் அவர்களிடம் பெற்றுக் கொள்ளும்படி அக்கூட்டுத்தாபனத்தின் உற்பத்தி முகாமையாளர் கேட்டுக்கொண்டுள்ளார்.

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் வைமன் வீதி 31- ஆம் இலக்கத்திலுள்ள ''ஈழநாதம்'' பணிமனையில் 1990 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 11 ஆம் திகதி [illegible] வெளியிடப்பட்டது.

### சுயநிர்ணைய

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

திய-இலங்கை ஒப்பந்தம் சரியானமுறையில் நிறைவேற்றப் படவில்லை என்றும் அவர் கூறினார்.

இராணுவத்தை அனுப்பி விடுதலைப்புலிகளை அழித்து விட்டால் பிரச்சினை தீர்ந்துவிடும் என்று எண்ணி சிறிலங்கா அரசு நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளது. இதனை இந்திய அரசு நன்கு புரிந்து கொண்டு இலங்கைத் தமிழர் பிரச்சினைக்கான தீர்வை எந்த அடிப்படையில் தீர்க்க முடியுமோ அந்த அடிப்படையில் தீர்க்க முன்வர வேண்டும் என்று அந்தப் பேட்டியில் அவர் வலியுறுத்தியுள்ளதுடன் இலங்கைத்தமிழர் பிரச்சினையைத் தீர்க்க மாநில தி.மு.க. அரசு மத்திய அரசை வற்புறுத்தி எதுவும் செய்ய முன்வரவில்லை என்றும் குறை கூறினார்.

அயல்நாட்டுப் பிரச்சினையில் தலையீடு குறித்த வெளியுறவு அமைச்சர் திரு. குஜ்ராலின் நிலைப்பாடு பற்றிப் பேட்டியில் கருத்துத் தெரிவித்த திரு இராமச்சந்திரன் ஒரு இடத்தில் படுகொலைகள் நடந்து கொண்டிருக்கும் பொழுது எந்த ஒரு நாடும் அதைப் பார்த்துக்கொண்டு சும்மா இருக்கமுடியாது என்றும் கூறினார்.

### இடம் பெயர்ந்த

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

ஆசிரியர்கள் தமது சம்பளமுற்பணம் சம்பந்தமாக சில தகவல்களைப் பெற்றுக் கொள்ள உரிய உத்தியோகஸ்தர்களுடன் இன்று தொடர்பு கொள்ளும்படி கல்விப்பணிப்பாளர் இரா.சுந்தரலிங்கம் கேட்டுள்ளார்.

ஜூலைமாத சம்பள முற்பணம் பெற்றுக்கொண்ட அனைத்து வெளிமாவட்ட ஆசிரியர்களும் இன்று காலை ஒன்பது மணிக்கு ஆகஸ்ட்மாத முற்பணம் பெறுவது சம்பந்தமாக பதிவு செய்து கொள்வதற்கு சமுகம்தரும்படி அவர் கேட்டுக்கொண்டுள்ளார்.

### மக்கள்

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

யில் அவர் இந்த வேண்டுகோளை விடுத்துள்ளார்.

அன்பார்ந்த மக்களே உங்கள் ஒரு நேரத்து உணவை விடுத்து அகதிகளான மக்களுக்கு உதவுங்கள். உங்களிடம் உள்ள ஆடைகளில் சிலவற்றைக் கொடுக்க முன் வாருங்கள் எனக் கேட்டுக் கொண்டார்.

### அகதிகள்

( 1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

சபை வழங்கியுள்ள ஒப்புதலுக்குக் கண்டனம் தெரிவிக்கும் வகையிலேயே இந்த உண்ணாவிரதமும், மறியல் போராட்டமும் நடாத்தப்பட உள்ளது.

காலை ஒன்பது மணிக்கு ஆரம்பமாகும் இந்த அடையாள போராட்டம் பிற்பகல் நான்கு மணிவரை நீடிக்கப்பட உள்ளதுடன் இச் சாத்விகப் போராட்டத்தில் அனைத்து மக்களையும் கலந்து கொள்ளுமாறு தமிழ் மாநில பாதுகாப்பு மன்றம் வேண்டுகோள் விடுத்துள்ளது. (24)

### காமன் வெல்த்

( 1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

பாராளுமன்றக் குழுவில் திரு துரைசாமியும் அங்கம் வகிப்பது குறிப்பிடத்தக்கது.

இலங்கையில் மேற்கொள்ளப்படும் இராணுவ நடவடிக்கை, அதைத்தொடர்ந்து தமிழ்மக்கள் அகதிகளாக இந்தியா வருகை ஆகிய விடயங்களும் விவாதிக்கப்பட உள்ளதாக திரு. துரைசாமிதெரிவித்தார்.

### அகதி முகாமில்

( 1 ஆம்பக் கத்தொடர்ச்சி)

வெரித்தாஸ் தெரிவித்தது.

இதேவேளை இப்பகுதிகளில் அமைந்துள்ள அகதி முகாம்களில் வைத்திய வசதிகள் இல்லாமையின் நிமித்தம் வயிற்றோட்ட நோயினால் இருபத்தொரு பேர் இறந்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

### 50 தமிழர்கள்

( 1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

த்திலிருந்து தப்பித்து வந்த ஒருவர் மட்டக்களப்பு வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருவதாகவும் தெரிவிக்கப்பட்டது.

## அகதி முகாம்கள் யுத்தகளம்

(லண்டன்)

ஜோர்த்தானில் அமைந்துள்ள பாலைவன அகதி முகாம்கள் யுத்த களங்களாக மாறும் ஆபத்து உருவாகி வருகிறது என செய்திகள் கூறுகின்றன.

லண்டனில் உள்ள செய்தி ஏஜென்சிகள் மூலம் இத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

குவைற்றில் இருந்தும், ஈராக்கில் இருந்தும் அகதிகளாக ஜோர்டான்சென்றுள்ள இலங்கையர்கள் தண்ணீர் தேடிச் செல்லும் வேளையில் தாக்கப்படுகின்றனர் எனவும் அச் செய்தி ஏஜென்சி தகவல் வெளியிட்டுள்ளது.

## தபால் ஊழியர் சுன்னாகத்தில் சந்திக்கவும்

(யாழ்ப்பாணம்)

வேலணை தபால் அதிபர், ஊழியர்கள் ஆகியோரை இன்று செவ்வாய்க் கிழமை காலை 9 மணிக்கு சுன்னாகம் தபால் நிலையத்திற்கு வருமாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இந்தச் சந்திப்பின்போது தீவுப்பகுதி தபால் விநியோகம், ஊழியர்கள் சம்பளம் பற்றித் தீர்மானங்கள் எடுக்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.